செய்தி வெளியீடு எண்.688 **7.10.2009**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள்**
**32 ஆயிரத்து 174 பேருக்கு 12 கோடியே 59 இலட்சம் ரூபாய்**
**போனஸ் மற்றும் கருணைத் தொகை!**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு பணியாளர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள், தற்காலிகப் பணியாளர்கள் ஆகியோருக்கு 8.33 சதவீத போனஸ் மற்றும் 11.67 சதவீத கருணைத்தொகை சேர்த்து 20 சதவீத போனஸ் வழங்கிடவும், நேரடி கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபாய் கருணைத் தொகை, 2008–2009 ஆம் ஆண்டில் 30 நாட்களுக்குக் குறையாமல் பணியாற்றிய தற்செயல் பணியாளர்களுக்கும், திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பருவகால சுமைதூக்கும் பணியாளர்களுக்கும் தலா 1500 ரூபாய் கருணைத் தொகை என 2008–2009 ஆம் ஆண்டுக்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.**

**இந்த ஆணையின் காரணமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் 32 ஆயிரத்து 174 பேருக்கு மொத்தம் 12 கோடியே 59 இலட்சத்து 22 ஆயிரத்து 161 ரூபாய் 2008–2009 ஆம் ஆண்டுக்கான போனஸ் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.**

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9